# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
**Provincial Department of Education Northern Province**

இரண்டாம் தவணைப் பரீட்சை 2023

தரம் 11 தமிழ் இலக்கிய நயம் நேரம் 3மணி

கட்டெண் 48 T I, II

**வினாத்தாள் 1**

**வினாத்தாள் 1 இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

**1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.**

(i) “ஊர்வாழ தேசம் வாழ

குருவுக்கும் சிவனுக்கும்

நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க”

(அ) இங்கு வாழ்த்துபவர் யார்?

…………………………………………………………………………………………

(ஆ) இவ்வரிகளில் எத்தகைய மனோபாவம் வெளிப்படுகிறது?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(ii) “பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே”

(அ) பாடல் இடம்பெற்ற இலக்கியம் யாது?

…………………………………………………………………………………………

(ஆ) இங்கு வந்துள்ள அணியை எடுத்துக்காட்டி விளக்குக?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(iii) “அய்யோடா கீழே சிதறிய முத்துக்களைப் பொறுக்குங்கள்”

(அ) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

…………………………………………………………………………………………

(ஆ) ‘‘கீழே சிதறிய முத்துக்கள்’ என்பதனால் உணர்த்தப்படுவது யாது?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

(iv) ‘‘குணகடல் செல்வியும் குடமலை ஏகினான்’’

(அ) மேற்கூறப்பட்ட தொடரின் பொருள் யாது?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

(ஆ) குணதிசை என்பது யாது?

……………………………………………………………………………………………

(v) ‘‘சொகுசுச் சிறைக்குள்ளிருந்து
தன் வாழ்வின் துயரைப் பாடுகிறது
மீன்குஞ்சு’’

(அ) இவ்வரிகள் இடம்பெற்ற கவிதை யாது? ஆசிரியர் யார்?

……………………………………………………………………………………………

(ஆ) சொகுசுச் சிறை என்பது எதனைக் குறிக்கிறது?

……………………………………………………………………………………………

(5 ×4= 20 புள்ளிகள்)

2. கீழ்க்காணும் உரைப்பகுதியை **அல்லது** செய்யுட் பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.

ஹைக்கூ என்பது ‘சிந்தனை எனும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறியகல்’ போன்றது என்கின்றார் சுஜாதா. கல் நீரில் அலைச்சுழியை ஏற்படுத்தி அதிர வைப்பது போல ஹைக்கூவும் வாசிப்பாளனிடத்தில் அதிர்வுகளை மூட்டிவிட வல்லது. ஹைக்கூ என்பது ‘தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு’ என்பார் கென்னத் யசூதா. எளிமையான சின்னச் சொற்களுக்குள் மிகவும் பெரியதான அர்த்தப்பாடுகளைக் கிளர்த்திவிடுகிற ஆற்றல் ஹைக்கூவுக்கு உண்டு. இதனால்தான் ‘சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம்’ என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

ஹைக்கூ ஒரு சத்தியத்தேடல். சுற்றுப்புறத்தின் மீதெழும் அர்த்தப்பார்வை, எல்லையற்று விரியும் கருத்துச்சேர்வை. அது வெறும் கவிதையல்ல. ஒரு வாழ்வியல் முறையாகும். ஜென் (Zen) தத்துவக் கோட்பாட்டின் இலக்கிய வெளிப்பாடுதான் ஹைக்கூ. உலகியலுடன் ஒன்றுவதும், தனித்து நிற்பதுமான இருநிலைப்போக்கின் ஒரு நிலைத் தத்துவம்தான் ஜென். இருப்பதில் இல்லாததும், இல்லாததில் இருப்பதும் எல்லாவற்றிலும் இருப்பையும் இல்லாமையையும் காண்பதுதான் ஜென் என்கிறார்கள். இது மூன்று வரிகளில் பதினேழு (5+7+5) அட்சரங்களைக் கொண்டது.

(i) ஹைக்கூவின் ஆற்றல் யாதெனக் கூறப்படுகிறது.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

(ii) இந்த உரைப்பகுதியில் வந்துள்ள உவமையின் பொருத்தப்பாட்டை விளக்குக.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(05 புள்ளிகள்)

(iii) ஜென் தத்துவம் கூறுவது யாது?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(05 புள்ளிகள்)

(iv) ஹைக்கூ அது வெறும் கவிதையல்ல என்று கூறப்படுவதற்கான காரணம் யாது?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(03 புள்ளிகள்)

(v) ஹைக்கூவின் அமைப்பு யாது?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**அல்லது**

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
    எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேசமாமரியா மக்த லேநா
    நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்
    தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாசமின்னி நமை நித்தங் காப்பார்
    நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா
    ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
    மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
    போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை
அன்பெனும் மரியா மக்த லேநா
    ஆஹா! சாலப் பெருங்கிளி யி∴தே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
    உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
    வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா
    பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
    நொடியி லி.ஃ.து பயின்றிட லாகும்.

(i) யேசுகிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்ப்புப் பற்றி பாரதி நோக்கும் முறை யாது?

………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………..

(ii) யேசு கிறிஸ்துவின் சிறப்புகள் ஐந்து எழுதுக.

………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………

(iii) மரிய மக்தலேநாவின் சிறப்புகள் ஐந்து எழுதுக.

………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………

(iv) ‘‘உண்மையென்ற சிலுவையிற் கட்டி உணர்வை ஆணித் தவம் கொண்டடித்தால்’’ என்ற

அடிகளின் சிறப்பை விளக்குக.

………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………
………………………………………………………………………………

(20 புள்ளிகள்)

## வினாத்தாள் 2

**1 ஆம் வினாவுக்கும் ஏனைய 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் 02 வினாக்களுக்குமாக, மொத்தம் 03 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

1. பின்வரும் கவிதையை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள தொடர்களின் அல்லது வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகிறோம் - தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினைக் கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும் தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் ‘கிறுக் கிறுக்’ கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்.

(அ) மலையக தோட்டத் தொழிலாளரின் துயர வாழ்க்கை
(ஆ) அடிமைத் தளையிருந்து விடுபடுவதற்கான நம்பிக்கை
(இ) தொழில் செய்வதில் காட்டும் அதீத ஆர்வம்
(ஈ) உவமை அணிகள் வெளிப்படும் விதம்
(உ) நயந்த பகுதி

(5 × 6 = 30 புள்ளிகள்)

2. **காலந்தோறும் அகம்** என்ற செய்யுட் பகுதியில்

(i) மானிடக்காதல்

(ii) தெய்வீகக் காதல்

ஆகியன வெளிப்படும் வகையினை எடுத்துக்காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

3. **தீவு மனிதன்** என்னும் சிறுகதையில்

(i) கதைசொல்லியின் தனிமை

(ii) கதைசொல்லியின் மகிழ்ச்சி

ஆகியன வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

4. **பத்தி எழுத்துக்கள்** என்னும் உரைநடைப் பகுதியில்

(i) மரம் உயர்திணை என்பதற்கான காரணங்கள்.

(ii) மென்மையானவை நீண்ட நாள் வாழும் என்ற கூற்று

ஆகியவற்றை எடுத்துக்காட்டுக.

(15 புள்ளிகள்)

**5. கிட்கிந்தைப் படலத்தில்**

(i) இலக்குமணனின் குணவியல்பு

(ii) தாரையின் மதிநுட்பம்

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

***